Registered No. M. 2830 "SIDDHANT..AM"
Vol. 41 — No. 5

MAY 1968

சித்தாந்தம்

சைவ சித்தாந்த மகா சமாஜத் திங்கள் வெளியீடு

'தன்க டன்னடி யேனையுந் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே'

மலர் 41 | கீலக வைகாசி 1968 மே | இதழ் 5

உள்ளுறை

உள்ளுறை	பக்கம்
திருவாட் போக்கித் தலயாத்திரை ...	121
திரு ஆலம் பொழில் ...	126
திருமுறையும் அருமறையும் ...	129
உதகமண்டலம் உணர்த்திய உண்மைகள் ...	133
பாம்பனடிகள் ...	135
வலிய ஆட்கொள்ளும் வள்ளல் ...	141
மதிப்புரை ...	149
வருந்துகிறோம் ...	152

இதழாசிரியர் : மு. அருணாசலம், எம். ஏ.,

துணையிதழாசிரியர் : வித்துவான் அம்பை. இரா. சங்கரன்.

சைவ சித்தாந்த மகா சமாஜம்,
12, கிழக்கு மாடவீதி, மயிலாப்பூர், சென்னை-4.

சமாசச் செயற்குழுக் கூட்ட அறிவிப்பு

சென்னை, மயிலாப்பூர் ஞானாத முதலி தெருவிலுள்ள சமாச அலுவலகத்தில் 30-6-68 ஞாயிற்றுக் கிழமை மாலை 4-15 மணிக்குச் சமாசச் செயற்குழுக் கூட்டம் நிகழும். அவ்வமயம் வரவு செலவுக் கணக்கு, பிற இன்றியமையாச் செய்திகள் பற்றி ஆலோசிக்கப் பெறும். செயற்குழு உறுப்பினர்கள் யாவரும் தவறாது வருமாறு கேட்டுக் கொள்ளப் பெறுகின்றனர். —(செயலாளர்)

சைவப் பெரியார் திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை அவர்கள் முதற் சமயக் கட்டளைப்படி 18-5-68 சனி மாலை 'உமாபதி சிவம்' பற்றி திரு. கொ. நீ. சிங்காரவேலு எம்.ஏ., அவர்களும், 19-5-68 ஞாயிறு மாலை 'பாம்பன் சுவாமிகள்' பற்றி புலவர் திரு. ந. ரா. முருகவேள் எம். ஏ., எம்.ஓ.எல்., அவர்களும் ஸ்ரீ பாலசுப்பிரமணிய பக்த சன சபையில் நம் சமாசச் சார்பில விரிவுரையாற்றினர்.

நம் சமாசச் சார்பில் சேக்கிழார் திருநாள் 1—6—68 சனிக்கிழமை மாலை ஸ்ரீ கபாலீச்சுரர் ஆலயத்தில் சிறப்புற நிகழ்ந்தது. திரு. கொ. நீ. சிங்காரவேல் எம்.ஏ., அவர்கள் 'சேக்கிழார்' பற்றி விரிவுரை யாற்றினார்கள்.

கீழ்க் காணும் அன்பர்கள் நம் சமாஜ ஆயுள் உறுப்பினராகச் சேர்ந்துள்ளனர் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

1. திரு. S. திருநாவுக்கரசு அவர்கள்,
   9. கனகசபை நகர்,
   சிதம்பரம்,
   தென்னார்க்காடு மாவட்டம்.
2. திரு. P. மூக்க பிள்ளை அவர்கள்,
   மளிகை வியாபாரம்,
   2-5, பெரியகடைத் தெரு,
   திருச்சி – 8.
3. திரு. சிவ. ராம. அ. நடராச முதலியார் அவர்கள்,
   நூல், ஜவுளி வியாபாரம்,
   அம்பாசமுத்திரம்,
   திருநெல்வேலி மாவட்டம்.

Reg. M. 2330

உ

சிவமயம்

சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியைஉள் நாடு.

மலர் 41	கீலக ஹு வைகாசி 1968 மே	இதழ் 5

திருவாட் போக்கித் தல யாத்திரை

—(ஆசிரியர்)—

குடந்தைச் சிவனடியார் திருக் கூட்டத்தாரும், ஆடுதுறை அருள் நெறிக் கழகத்தாரும் சேர்ந்து திரிசிராப் பள்ளியை யடுத்த சில தலங்களுக்கு மார்ச் மாதம் 16, 17 தேதிகளில் வழிபாடாற்றச் சென்றிருந்தார்கள். 51 பேருக்காகத் தனியே ஒரு பஸ் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. சித்தாநதம் ஆசிரியரும் இரண்டு நாளும் உடன் சென்றார், காலையில் முதலாவதாக திருஆலம்பொழில் வழிபாடு நிகழ்ந்தது. பெருமான் சந்நிதியில் குடந்தை பண்ணுராய்ச்சி வித்தகர் ப. சுந்தரேசம் பிள்ளை அத் தலப் பதிகத்தைப் பண்ணோடு ஓதி வந்தார்.

கூட்டத்தார் முதலில் தங்கள் வழக்கம் போல குடந்தை சோமநாதர் கோயிலை வழிபட்டு யாத்திரை தொடங்கினார்கள். இக்கோயிலில் சுவாமி ஞானதேயச் சோமேசர். அம்பிகை சோம சுந்தரி; தேனார் மொழி என்பது சம்பந்தர் பாடிய குடந்தைக் காரோணத் தேவாரத்தின் தொடர்.

இது இவ்வம்பிகையைச் குறிப்பது என்பர். அம்பிகைக்கு இன்றும் தேனார் மொழி என்று இங்கு பெயர் வழங்குகி றது. அம்பிகை மிகவும் அழகு பொருந்திய வடிவம்.

இது பற்றி ஒரு குறிப்புச் சொல்லத் தக்கது. குடந்தையில் பதிகம் பெற்ற தலங்கள் மூன்று. ஒன்று குடமூக்கு; இதுவே கும்பேசர் கோயில். ஊர்ப் பெயருக்கும், ஊர்ச் சிறப்புக்கும் இதுவே காரணம்; மிகப் பெருங் கோயில், இரண்டாவது குடந்தைக் கீழ்க் கோட்டம்; இது நாகநாத சுவாமி கோயில்; எல்லாச் சிறப்புக்களும் பொருந்தியது. மூன்றாவது குடந்தைக் காரோணம். இது பற்றிக் கருத்து வேற்றுமை உண்டு. காசி விசுவநாதர் கோயில் என்று வழங்குகின்ற கோயிலே காரோணம் என்று கருதி, நகரத்தார் இங்கு பெரும் திருப்பணி செய்திருக்கிறார்கள்.

அது பற்றி காரோணம் என்பது விசுவநாதர் கோயில் என்ற கருத்து நிலவி வருகிறது. எனினும், தமிழ் நாட்டில் விசுவநாதர் என்ற பெயருடைய கோயில் மிகவும் பிற் காலத்தில் தோன்றியதே. ஆகையால், சோமேசர் கோயிலே காரோணமாகும் என்ற கருத்து அதிகம் வலிவு பெறுகிறது. அன்பர்கள் சிந்திக்க.

முதல் கோயில் திருவாலம் பொழில், மேற்கு பார்த்த சந்நிதி. வசதி குறைவான கோயில். சிறப்பான முறையில் வழிபாடு செய்த பின்னர் அங்கிருந்து அனைவரும் மேற்கே 4 மைல் தூரத்திலுள்ள செந்தலை சென்றார்கள். செந்தலை என்பது ஊர். இது பாடல் பெற்ற தலம் அல்லவாயினும், சரித்திர முதன்மையுடைய ஒரு சிறந்த தலம். சந்திரலேகா சதுர் வேதி மங்கலம் என்று வழங்குவது. முதல் பராந்தகன் கல்வெட்டுடையது இம் மீனாட்சி சுந்தரேசர் கோயில். இங்கு ஆண்ட முத்தரையர் என்போர் பாண்டியனை வெற்றி கொண்டதன் அடையாளமாகத் தங்கள் நாட்டு மேற்கு எல்லையில் ஒரு கோட்டை போலவே இக்கோயிலை அமைத்துள்ளனர். கோயில் முழுமையும்

கல் வெட்டுக்கள் நிறைந்துள்ளன. இக்கோயிலின் சிறப்புகள் மிகப் பல. இது பற்றித் தலப் பகுதியில் காண்க. நடராஜ வடிவம் மிகவும் பெரியது. அம்பிகையும் அப்படியே. முதற் பராந்தகன் காலத்தில் இத்தலம் சந்திரலேகா சதுர்வேதி மங்கலம் என்றும், கோயில் திருப்பெருந்துறை என்றும் பெயர் பெற்றிருந்தன என்று கல்வெட்டால் அறிகிறோம். 'திருப்பெருந்துறையுடைய மகாதேவர்' என்றே சாசனம் கூறுகின்றது.

அடுத்த தலம் திருக்காட்டுப்பள்ளி என்ற மேலைத் திருக்காட்டுப்பள்ளி; தேவாரப் பதிகங்கள் உடையது. சிறப்பான பெரிய கோயில். கோயில் ஊரைப் பார்க்க மிகமிகப் பள்ளத்திலிருந்தது; கோயில் திருப்பணி செய்ய வேண்டிய நிலை.

அடுத்த தலம் நியமம். இது வைப்புத் தலம். மிகவும் பழமையான கற்கோயில்; எல்லாச் சிறப்புகளுமுடைய பழங் கோயில். இங்கிருந்து, திரும்பி யாரும் எளிதில் போவதற் கியலாது. அடுத்து திருக்கானூர் என்ற தலம்: அப்பர் அருமையாகக் குறுந் தொகை பாடியிருக்கிறார். சம்பந்தர் பதிகமும் உண்டு. இக்கோயில் முழுமையும் மணலால் மூடப்பட்டுக் கிடந்து, துறவி ஒருவரால் 100 ஆண்டுகளுக்கு முன் தம் காலில் இடறிய விமானக் கலசத்தைக் கண்டு கோயில் இருப்பதறிந்து வெளிப் படுத்திய கதை பெரிய வரலாறு. இத்தலம் பற்றிய குறிப்பு சென்ற இதழில் வெளி வந்துள்ளது.

திருக்கானூரிலிருந்து திரும்பும் வழியில் புதுச் சந்திரம் என்ற ஊரில் அங்கையர் என்ற ராஜகோபாலய்யர் இல்லத்தில் மகேஸ்வர பூஜை ஏற்பாடாகியிருந்தது. திங்களூர் அப்பூதியடிகள் போல இவர் உபசரித்தது மிகவும் போற்றத்தக்கது. இரண்டு மணி நேரம் எதிர்பாராதபடி கனத்த மழை பெய்தமையால் பிரயாணம் பெரிதும் தடைப்பட்டது. அன்றைய திட்டத்தில் குறிப்பிட்டிருந்த திருப்பாச்சிலாச்சிராமம், திருப்பராய்த்துறைத் தரிசனங்கள் நடைபெறவில்லை.

கல்லணை வழியாகத் திருப்பாற்றுறை அடைந்து நித்திய கல்யாணி (மோகநாயகி) சமேத திருமூலநாதரை வழிபட்டார்கள். கோயிலுக்குச் சற்று தூரத்திலிருந்தே நடப்பது தவிர வழியில்லை. இத்தலத்தில் சமுத்திர கோஷம் என்ற கடுவாய் என்னும் வாத்திய வாசிப்பு விசேடம். இங்கிருந்து பஸ்ஸில், திருச்சி பராய்த்துறை வழியாகச் சென்று கடம்பர் கோயிலில் தங்கினார்கள். மறுநாள் காலையில் அனைவரும் கடம்பர் கோயிலில் காலையில் காவிரியில் நீராடி பழமொழியாக வழங்கும் வரலாற்றுக் கேற்ப காலைக் கடம்பரையும், மத்தியானச் சொக்கரையும், மாலை திருவேங்கிநாதரையும் வழிபட்டார்கள்.

கடம்பர் கோயில் என்பது குளித்தலை; சிறப்பான வசதி படைத்த நல்ல நிலையிலுள்ள பெருங் கோயில். வடக்குப் பார்த்த சந்நிதி. தமிழ் நாட்டில் இக்கோயில் ஒன்றே இவ்வாறு உள்ளது. ஆதலினால் கோயிலுக்குள் நுழைந்த பின் பரிவார மூர்த்திகள் முதலியோர் அமர்ந்துள்ள திசைகள் யாருக்குமே திகைப்பு உண்டாக்கும். கடம்பர் கோயிலில் வழிபாட்டுக் குழுவினர் இருபது பேருக்கு மேல் ஆடவரும் பெண்டிருமாக அமர்ந்து சிவ பூஜை செய்த காட்சி, பொலிவு பெற்ற ஓர் அரிய காட்சி.

அங்கு வழிபாட்டை முடித்துப் பின்னர் ஆறு மைல் தூரத்திலுள்ள திருவாட் போக்கிக்கு அனைவரும் சென்றார்கள். திருவாட் போக்கி என்பது ஐயர் மலை என்று வழங்குகிறது. அதற்கு ஒரு மைல் தூரத்திலுள்ள சிவாயம் என்ற ஊரில் இருந்த மிகப் பெரிய கோயிலில் முதல் வழிபாடு நடந்தது. சுவாமி இரத்தின கிரீசுவரர். சிவாய என்ற சூக்ஷ்ம பஞ்சாட்சரத்தின் பேரைக் கொண்டு அமைந்த ஊர். ஊரும் கோயிலும் பிரணவத்துக்கும் பஞ்சாட்சரத்துக்கும் என்றே ஏற்பட்டன என்று சொல்லுவார்கள். நடராச மூர்த்தி மிக்க பிரகாசம் பொருந்திய தோற்றத்தினர் இத்தலச் செய்திகளைத் தனியே ஒரு முறை தொகுத்தெழுதினால் தான் சிறப்புறும்.

வாட்போக்கி என்பது இரத்தினகிரி மலை. வாட்போக்கி, சிவாயம் இரண்டும் சேர்ந்தது சிவாயம் என்ற ஊர். இரண்டிடத்திலும் சுவாமி இரத்தினகிரீசுவரர்; அம்பிகை மரகதாசல நாயகி. வாட்போக்கி மலையானது இன்று ஐயர் மலை என்று வழங்குகிறது. சுத்தமாகக் கட்டி விடப்பட்ட புதிய படிகள் 1017. சுமார் 800 அடி உயரம். வலிமை குறைந்தவர்களுக்கு ஏறுவதற்கு மிகவும் கடினம். இவ்விதமாக ஒரு பெருங் கூட்டத்தில் கலந்து சென்றால் தான் படியேறிச் செல்ல முடியும். மலையின் உச்சியை அடைந்து செய்யும் வழிபாடு மிக்க இன்பம் தருவது. மத்தியானச் சொக்கராவார் வாட்போக்கி நாதர்; பெருங் கோயில். மகாலிங்கம் பட்டையான நீண்ட வடிவினர். எல்லோருக்கும் பெரிய ஆனந்தம் விளையும் நிலையில் தரிசனம் நடந்தது.

அங்கிருந்து இறங்கி வந்து ஆறு மைலில் குளித்தலை அடைந்து அங்கு பஸ்ஸை விட்டு இறங்கி மாலை தரிசனம் செய்ய வேண்டும் என்ற ஆர்வத்தால் அனைவரும் அகண்ட காவேரியைக் கடந்து திருவேங்கி மலை எனப்படும் ஈங்கோய் மலையை அடைந்தனர். அந்தி நேரத்தில் ஆற்றைக் கடந்து செல்லுதல் ஆடவர் பெண்டிர் அனைவருக்கும் மனத்திற்குப் பெரிய மகிழ்ச்சி தரும் நிகழ்ச்சி. ஒரு மைலுக்கு அதிகமான அகலம். ஒரு முழம் தண்ணீர் காவேரியில் நாலைந்து காலாயங்களாக ஓடிற்று. பின்னர் ஈங்கோய் மலை; சுமார் 500 படிகள்; வாட்போக்கி போல் அவ்வளவு செங்குத்தன்று. எல்லோரும் ஈங்கோய் நாதர் சந்நிதியடைந்து பதிகம் பாடி மகிழ்ச்சியோடு வழிபட்டார்கள். மகாலிங்கம் பெரிய வடிவம்; பச்சை நிறம்.

இத்தல வரலாற்றுக் குறிப்புக்கள் அடுத்து வெளிவரும்.

காலையில் கடம்பர் கோயில் கடம்பரையும் மத்தியானத்தில் வாட்போக்கிச் சொக்கராகிய இரத்தினகிரீசுவரையும், மாலையில் திரு ஈங்கோய் மலை நாதராகிய மரகதாசலே

சுவரரையும் ஒரே நாளில் வழிபடுபவர்களுக்கு மறு பிறவி இல்லை என்ற பழமொழிக்கேற்ப வழிபாடு மிகவும் அழகாக நடைபெற்றது. குடந்தைச் சிவனடியார் திருக்கூட்டத் தலைவர் பி. தி. சொ. சிங்காரம் செட்டியார் அவர்கள் தலைமையில் வழிபாடு நடந்தது. சென்றோரில் பாதிக்கு மேற்பட்டவர்கள் ஆடவரும் பெண்டிரும் வயது மிகுந்தவர்கள். அவர்களனைவரும் ஏனையோரும் இறைவனுடைய திருவருள் ஒரே நாளில் இவ்விரண்டு மலைகளையும் ஏறி இறங்குவதாகிய பெரிய சாதனையைச் செய்ய உதவிற்று என்பதை நன்கு உணர்ந்தார்கள்.

இவர்களில் மிகப் பலர் சமாஜ உறுப்பினர், பெரும் பகுதியினர் தீக்ஷை பெற்றவர்கள். பலர் சிவ பூஜை செய்பவர்கள்; வயோதிகர்.

இத்தகைய சிறப்பு யாத்திரை, திருவருளின் ஆற்றலை நன்கு உணர்த்தி, கலந்து கொண்டவர்களுக்குச் சிறந்த ஆன்மநேயத்தை ஊட்டுவித்தது என்பதை எல்லோரும் கண்கூடாகக் கண்டோம்.

ஆங்காங்கிருந்த ஆலய நிர்வாகிகளும், இறைபணியாளரும், அர்ச்சகரும் இறைவழிபாட்டுக்கான வசதிகள் செய்து தந்தமை போற்றற்குரியது.

திரு ஆலம் பொழில்

(மு. அ.)

இடம் :- தஞ்சை ஜில்லாவில் திருக்கண்டியூர் வழியே திருப்பூந்துருத்தியடைந்து அங்கிருந்து மேற்கே ஒரு மைல் தூரம் சென்றால் கோயிலை அடையலாம். கோயில் சாலையின் வடபால் உள்ளது. இங்கு ஒரு காலத்தில் வைணவர் நிரம்ப வாழ்ந்தனர் என்றும், தங்களுக்குள் ஏற்பட்ட பூசல்கள் காரணமாக யாவருமே அழிந்தனர் என்றும் சொல்வர்.

பெயர் :- இவ்வூர் தென்பரம்பைக்குடி என்றும், கோயில் ஆலம் பொழில் என்றும் தேவாரத்தில் பாடப் பெற்றுள்ளது. இவ்வூரில் திருஞானசம்பந்தர் மேடு என ஒன்று தனியே உள்ளது. தென்புறம் இருபரம்பூர் உள் ளன; வெள்ளான்பரம்பூர் தென்பரம்பூர் என்பன. தேவார காலத்தில் இரண்டும் ஒன்ருய்த் தென்பரம்பைக் குடி எனப் பெயர்பெற்றிருந்தன போலும். சுவாமி பெயர் ஆன்மநாதர். அம்பிகை ஞானம்பிகை. தல விருட்சம் ஆல்; இது கோயில் பிராகாரத்தில் இல்லை; வெளியில் உள் ளது. திருவிளாம்பொழில் என்று ஊர்ப் பெயர் மருவி வழங்குகிறது.

—நண்பார்ந்து

பூநாறும் ஆலம் பொழில்மேவி வாழ்கின்ற
ஞானம் பிகையான்ம நாதனே.

கோயில் :- மேற்குப் பார்த்த சந்நிதி. பழைய கற் கோயில். சிறு கோபுரம். விசாலமான பிரகாரம் உடை யது. சுற்றுப்புறம் உயர்ந்து கோவில் தாழ்ந்து உள்ளது. அம்பிகை கோயில் வழக்கம்போல் தனியே உள்ளது. அதன் வாயிலில் விநாயகர். சண்டேசர் கோயிலில் பழைய சண்டேசர் வடிவமொன்று வெளியில் வைக்கப்பட் டுள்ளது.

மூர்த்தி :- சிருதியில் சித்திவிநாயகர், முன்புற வாயி லில் துவார விநாயகர், உள்வாயிலில் சுந்தர விநாயகர். இங்கு வடபுறம் மட்டும் இரு கையுடைய பழைய துவார பாலகர்; நடுத்தர உருவினர். தென்புறமுள்ளவரைத் திருடர் கொண்டு போயினர் என்று சொல்லுகிருர்கள். ஆனல் (கனத்த கற்சிலை !) தென்புற வாயிலோரம் சிறு அப்பர் சிலை வடக்குமுகமாக வைக்கப்பட்டுள்ளது. துவாரபாலகரின் கீழ் வழக்கம்போல் சிங்கம் இல்லாமல் இங்கு யானை உள்ளது. வட கோட்டங்களில் துர்க்கை, பிரமன்; சண்டேசர். பின் கோட்டத்தில் சிலை இல்லை; கோயிலில் சத்தமாதர்கள் இருந்தனர் போலும்; ஒரு சிலை இவ்விடத்தில் வைக்கப்பட்டுள்ளது; பொருத்தமில்லை.

மகாலிங்கம் நடுத்தர வடிவினர். அம்பிகை சிறிய திருவுருவம். மிக்க அழகியவர். உற்சவ மூர்த்திகள் உள்ளனர். நால்வர் சிலை உண்டு. நடராசர் சபையில் இல்லாமல் உற்சவ மூர்த்திகளோடு வைக்கப்பட்டுள்ளார். சிறிய வடிவினர். சிவகாம சுந்தரி மிகவும் பெரியவடிவு; இந்த நடராசருக்குப் பொருந்திய வடிவம் அல்லர். பழையது எவ்வாறோ மறைந்து புதிதாக அமைக்கப்பட்டதுபோலும். இப்படிமத்தை மாற்றுவது மிகவும் அவசியம். முருகன் தேவியரோடு உள்ளார்.

வரலாறு :- இது அட்டவசுக்கள் பூசித்த தலம். சுந்தரமூர்த்தி நாயனார் சோற்றுத்துறை வணங்கி, பதிகம் பாடி, பின்னர் கண்டியூர் டணிந்து திருவையாறதனையும் வணங்கி, பூந்துருத்தி விமலர்பாதம் தொழுதிறைஞ்சி, பின்னர் சேவில் வருவார் திருவாலம் பொழிலில் சேர்ந்து சார்ந்து இரவு அவர் பள்ளிகொண்டிருந்தபோது, கனவில் மழபாடி நாதர் தோன்றி, 'மழபாடியினுள் வருவதற்கு நினைக்க மறந்தாயோ?' என்று குழகாகிய தம் கோலம் எதிர்காட்டியருளினர். அப்படியே சுந்தரர் காலையில் பொன்னி கடந்து வடபால் சென்று மாடவீதியுடைய மழபாடி அணைந்து போற்றி "பொன்னார் மேனியனே" என்ற பதிகம் பாடினார் என்று சேக்கிழார் கூறுகிறார். எனினும் திருவாலம் பொழிலுக்கு இன்று சுந்தரர் பதிகம் கிடைத்திலது. எதிரில் ஒரு பாழ்மண்டபத்தில கடைகள் உள்ளன; ஒருகால் இது சுந்தரர் துயின்ற மண்டபமாயிருக்கலாம்.

பாடல் :- அப்பர் திருத்தாண்டகப் பதிகம் ஒன்றே உள்ளது. இப்பதிகத்துள் ஒன்பது பாடல்களே கிடைக்கின்றன. பாடல்தோறும் 'தென்பரம்பைக் குடியின்மேய திருவாலம் பொழிலானைச் சிந்தி நெஞ்சே' என்று பாடுகிறார். சில கருத்துக்கள் நயம்பட உள்ளன. "உடம்பின் உள்ளால் கரு ஈன்ற வெங்களவை அறிவான் தன்னை", "வாரமதாம் அடியார்க்கு வாரமாகி, வஞ்சனை செய்வார்க்கென்றும் வஞ்சனாகும்" என்பன காண்க. இப்பதிகத்தில்

வலஞ்சுழி, ஆவடுதுறை, தில்லை, பூந்துருத்தி, புகலூர், பராய்த்துறை, வாட்போக்கி, வெண்காடு, பூவணம், புறம்பயம் ஆகிய தலங்களைக் கூறுகிறார்.

நாலாம் பாடலில் 'சுரும்படரும் குழலாள் பாகத்தான்' என்று கூறுகிறார். இப்பெயரே அம்பாள் திருநாமமாக இருத்தல் கூடும். இப்பதிகத்தில் குறிப்பிட்ட திருவாட்போக்கியின் அம்பாள் திருநாமம் சுரும்பமர் பூங்குழலாள் என்பதே.

கல்வெட்டுக்கள் ;- ஆழத்துள் புதைந்து பிரகாரம் மேடிட்டு விட்டது. பரம்பைக்குடியுடைய மகாதேவர் என்பது இறைவர் பெயராகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

நிர்வாகம் :- இறைபணியாளர் உள்ளார். சொத்துக் குறைவு.

திருமுறையும் அருமறையும்

–: (சிவ. மீனாட்சி சுந்தரசிவை, சென்னை) :–

(முன் இதழ் தொடர்ச்சி)

பின்னை அவன் ஆரூர் கேட்டாள் – ஊரின் பெயர் முதற்கண் சொல்லப்பட்டதாயினும் கொண்டு கூட்டு முறையில் பின்னர் அமைத்து, திருககாளத்தி மலையெனக் கொள்ளுதல் வேண்டும். இதற்கு ஒபபு, முகவரியில் ஊரின்பெயர் அடியில் எழுதப்பட்டிருந்தாலும், அஞ்சலகத்தார் பிரித்துக் காணும் பொழுது அதனையே முதற்கண் காண்பர். இதுவே ஆரூர் கேட்டதாகும்.

பெயர்த்தும் அவனுக்கே பிச்சியானாள் – திண்ணனார் பார்ப்பான் செய்த பூசைச் சிறப்பினைக் கேட்டதும் ஒழிவின்றி ஆரா அன்பில் திருக்காளத்தி நாயனாருக்கு இனிய செய்கை, எண்ணிய இவைகொலாம் என்று கடைப்பிடித்துக் கொண்டார். இதுவே பிச்சியானதாகும்.

அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள் – தெய்வக் கற்புடைய மகளிர் பிறந்த இடத்தை மறந்து, சிறந்த இடத்துக் காதலால் செயல் செய்து, ஊரும், உறவும் புகழ வாழ்வர். அதுபோன்று. திண்ணனாரும் இறை பணி பான ஆண்டவன் தொண்டையே, மேற்கொண்டனர். அதனால் உடன் வந்த நாணனையும், காடனையும் அப்பொழுதே மறந்துவிட்டனர். நாணன் மாயையாகவும், காடன் இருவினையாகவும் கொள்ளப்பட்டு அன்னையும் அத்தனும் ஆவர். அதன் பின்பு ஊரிலிருந்து தந்தையாகிய நாகனும், தாய்க்குத் தாயாம் செவிலித்தாயை ஒத்த தேவராட்டியும் வந்து திண்ணனாரைத் தம் வழிப்படுத்த முயன்றனர், தங்கள் குறி வாராமையால் கைவிட்டுச் சென்றனர்.

அகன்றாள் அகலிடத்தார் ஆசாரத்தை – அகலிடத்தார் ஆசாரம் என்பது தத்தம் வழிபடு கடவுளுக்குத் தாம்தாம் உண்ணும் உணவைப் படைத்து வழிபடுவதாகும். அத்தகையோரும் சிவபெருமானை வழிபடும்போது தூய உணவாகிய தேங்காய், பழம் வைத்தே வழிபடுபவர். குறவர் முதலாயினார் தத்தம் இடங்களில் அந்நிலத்துத் தெய்வமாகிய முருகப்பெருமானை வழிபடுங்கால் தம்முணவு படைத்து வழிபட்டாலும், மேலோர் வழிபடும் இடங்களிலுள்ள முருகனை வழிபடும்போது தூய, மேலே உரைத்த படைப்பினைப் படைத்தே வழிபடுவர் அதற்கு மாறாகத் திண்ணனார் இறைச்சி முதலியவற்றைப் படைத்தது மட்டுமின்றி, ஊட்டியதும் இருதிறத்தாராயுள்ள அகலிடத்தார் ஆசாரத்தை அகன்றதாகும்.

தன்னை மறந்தாள் – ஒருவர் தன்னை மறவாமல் இருப்பதென்பது உழைப்புக்கு ஊக்கந்தருவதாகிய உணவு உண்டலும் உழைப்பால் ஏற்படும் களைப்பு நீங்க உறங்குவதும் ஆகும். திண்ணனார் விடா உழைப்பினராய் ஊணும் உறக்கமும் அற்று ஆறுநாள் முடிய இருந்தனர் என்பதாம்.

தன்னுமம் கெட்டாள் – திண்ணனூர் என்னும் பிள்ளைத் திருப்பெயரும் வேடர் குலத் தலைவன் என்னும் உரிமைச் சிறப்புப் பெயரும் நீங்க, கண்ணப்பர் என்னும் காரணப் பெயர் பெற்றதாகும். கண்ணப்பர் என்னும் பெயர் புறத்துக்கண்ணை இடந்து அப்பிய காரணத்தால் உண்டானதாகும். இவ்வருஞ் செயலுக்குரிய நற்றவப்பேறு முன்னே, அகத்து உயிர் உணர்வில் அடங்கி இருந்தது. அஃதாவது, கண் என்பது கருத்து. எனவே, குடுமித் தேவர் திருவடிக்குக் கொண்ட கருத்து நீங்காதிருந்ததென் பதாம்.

நங்கையாகத் தலைப்படுவது – குடுமித் தேவரைக் காண் பதற்கு முன்னேயே

“ அங்கணர் கருணை கூர்ந்த அருள்திரு நோக்கம் எய்த
தங்கிய பவத்தின் முன்னைச் சார்புவிட்டகல நீங்கிப்
பொங்கிய ஒளியின் நீழல் பொருவில் அன்புருவம் ஆனுர் ”

என்பதாம்.

தலைவன் தாளே தலைப்பட்டாள் என்பது திண்ணனூர் மற்றுமோர் கண்ணையும் இடந்து அப்பத்தொடங்க

“ உள்நிறை விருப்பிஞேடும் ஒரு தனிப் பகழிகொண்டு
திண்ணனூர் கண்ணில் ஊன்றத் தரித்திலர் தேவதேவர்”

அதன்பின்,

“ செங்கண் வெள்விடையின் பாகர், திண்ணனூர் தம்மையாண்ட
அங்கணர், திருக்காளத்தி அற்புதர் திருக்கை அன்பர்
தங்கண்முன் இடக்குங் கையைத் தடுக்க மூன்றடுக்கு நாக
கங்கணர் அமுத வாக்குக் “கண்ணப்ப நிற்க”

என்றதாம்.

அதன் மேலும், ஏறுயர்த்தவர் தம் கையால் பிடித்துக் கொண்டு என் வலத்தில் மாறிலாய் நிற்க என்று மன்னு பேர் அருள் புரிந்தார் என்பதும் ஆகும்.

ஆண்டவனுடைய திருவடி இரண்டும் வீழுப்பேறும், வழிப்பேறும் பெறுவிக்கும் உணர்வுகளாகும். இடது திருவடி உவமையிலாக் கலைஞானம் எனப்படும். வலது திருவடி உணர்வரிய மெய்ஞ்ஞானம் எனப்படும். இவ்வுண்மை "சிவனடியே சிந்திக்கும்" எனத் தொடங்கும் சேக்கிழார் அருளிய, திருப்பாட்டால் அறியலாம்.

(திருஞான சம்பந்தர் புராணம் 70)

உவமையிலாக் கலைஞானம் என்பது புகழ்நூலும், பொருள் நூலுமாகிய திருமுறைகளும், சித்தாந்த நூல்களும் ஆகும். திருமுறைகள் தோத்திரமெனவும், சித்தாந்த நூல்கள் சாத்திரமெனவும் சொல்லப்படும்.

இறைவன் பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு இருள் சேர் இருவினையும் நீங்கும். வினை நீங்கவே பிறப்பறும், பிறப்பறவே திருவருளால் சிறப்புறும். இவற்றை இலக்கணவகையால் கூறுவதே சாத்திரமாகும். அதுவே பொருள் நூல்; சிறப்பெய்திய உயிர் மீண்டும் பிறப்பதில்லை. பிறவாப் பெருந் தெய்வமாகிய சிவத்தொடு கூடிப் பேரின்பம் துய்க்கும் அத்தகைய பேரருளிப் பாட்டைப் புரியும் முதல்வன் சிவபெருமான் ஒருவனேயாகும். அவனது இவ்வருளிச் செயல் அவனுக்குப் பெரு வெற்றியாகும். வெற்றி யென்பது வலம் எனவும் பெறப்படும். ஏனையாரைப் பிறப்பினின்றும் நீக்கித் தன் திருவடிச் சிறப்பினை அவர்மாட்டாக்குவதற்குத் தன்னுடைய வெற்றியின் அடையாளம் ஒன்றை வெளிப்படையாகக் காட்டுதல் வேண்டும். அங்ஙனம் காட்டும் காட்சியே கண்ணப்ப நாயனார் அவர்தம் அடிக்கீழ் உறைதலாகிய வலத்து நிற்பதென்பதாம். இவ்வுண்மை,

"தாழ்ந்தெழுந்து என்றும்,, உள்ளத்தில் தெளிகின்ற என்றும் தொடங்கும் திருஞானசம்பந்தர் புராணம் 1022 1023 பாடல்களால் அறியலாம்.

உதகமண்டலம் உணர்த்திய உண்மைகள்

(மா. ப. தியாகராசன் பி. ஏ.)

உதகமண்டலத்திற்குச் சென்ற ஆண்டு சென்றிருந்த போது முதன் முதலில் வெண்மேகங்கள், உயர்ந்த மலைகள் மேல் தவழ்ந்துகிடந்ததைக் கண்டவுடன் மாணிக்கவாசக சுவாமிகள் "திருவெம்பாவையில் பாடியுள்ள எம்பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த பொங்குமடு" என்ற அடி நினைவுக்கு வந்தது. அப்படி எம்பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த உயர் மேகம் தவழ்கின்ற மாமலைத்தொடர் மேல் படர் தாவர இனங்கள் தரும் கண்கவர் காட்சியும் அவைகள் மேல் படரும் வண்ணப் பூக்களின் எழிலும் கைம்மாறு கருதாப் பயன் தரும் பான்மையை உணர்த்திற்று. மேலும் அங்கு கொடிய விலங்குகள் வாசம் செய்யின் அவ் வனப்புகளைக் கண்டுகளிக்க மனிதர்களுக்கு அவை பயன் படா. அதுபோல மனத்தில் வஞ்சக் குரோத மதமாச்சரியாதி விலங்குகள் வாழாதிருப்பின் அதை இறைவன் கண்டு களிப்பான். விலங்குகள் இல்லாக் கானகத்தை எப்படி மனிதன் பண்படுத்தி ஊற்று நீரெடுத்துச் செடி கொடிகளை வளர்த்து அழகு படுத்துகிறானோ அதுபோல விலங்குமனம் அல்லாதவற்றைச் செமமைபபடுத்தி அதனூடே மாணிக்க வாசகங்கள் ஊற்றெடுத்து வரும்படி இறைவன் செய்வான்.

மேலும் தாவர இனங்கள் ஒன்றுகூடி தம் அண்டையிலுள்ள இனமரங்களுடனேயும் வேற்று மரங்களுடனேயும் போட்டியிடாமல், மெலிந்து படர்ந்து வரும் சிறுகொடிகளுக்கு வெயிலின் வெப்பம் தாக்காதபடி நிழல் தந்து காத்து அவை மேலோங்கிப்படர தம்மையே கொடுத்தும் மேலோங்கி வளர்கின்றன. அதுபோல மனிதர்களாகிய நாமும் அப்படி வாழக் கற்றுக்கொண்டால் தேவர்களும் நம்

முடன் இன்புற்றுவாழ வருவார்களென்பதில் ஐயமில்லை. அப்படிப்பட்ட மக்களிடைதான் இறைவன் வந்து திருவிளையாடல்களைப் புரிந்திருக்க வேண்டும். அவை இனத்தைக் காப்பதோடு நின்றுவிடாமல் மேலோங்கி வளர்கின்றன. நாமும் இறைவனை நோக்கி மேன்மையுற வாழ வேண்டுமென்பதை அவை காட்டுகின்றன. எத்தனை தரம் அவைகளைக் கத்தரித்தாலும் அவை அழகுபட விளங்குகின்றன.

மலைகள் மேகத்தைத் தாங்கி அவற்றின் நீரைக் கசிவித்துத் தம் கீழே வாழும் மக்களுக்கு அருவியாகப் பாய்ச்சுவதுபோல எம்பிராட்டியாகிய பசுமை நிறம் வாய்ந்த அம்பிகை சிவபெருமானிடம் அருளை வாங்கி அருள்மழை பொழிவித்து அடியவர்களைக் காக்கின்றாள்.

Dodapeda Peak என்னும் உச்சி 8600 அடி உயரத்திலுள்ளது. இது சென்னை மாநிலத்திலேயே உயரிய உச்சியெனக் கருதப்படுகிறது. உதகமண்டலத்தில் (Eucalyptus oil) யூகா லிப்டஸ் என்ற தைலம் தரும் மரங்கள் ஏராளமாயுள்ளன. அந்தத் தைலம் சுரம், தலைவலி, இருமல் முதலிய வியாதிகளைக் குணப்படுத்த உதவுகிறது. அம்மரம் தன்னை வெட்டும் கோடரிக்கும்கூட தன் மணத்தை ஊட்டுகிறதென்றும் அதன் பெருமையை மக்கள் பின்பற்ற வேண்டுமென்ற உயர்ந்த கருத்து அம்மலையின் உயர்ந்த உச்சியில் பொறிக்கப்பட்டிருப்பது மிகவும் பொருத்தமானதும் போற்றத்தக்கதுமாகும்.

அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை. —(குறள்)

பாம்பனடிகள்

(வித்துவான் அம்பை. இரா. சங்கரனார்)

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் இந் நூற்றாண்டின் முற்பகுதியிலுமாக நம் தண்டமிழகத்தில் வாழ்ந்த பெருமக்களுள் தலையாய இடத்தைப் பெறுபவர் பாம்பனடிகள் எனும் குமரகுருதாச சுவாமிகள் ஆவர். தமிழ் நாட்டில் தோன்றிய பிற துறவிகளுக்கும் இவர்களுக் கும் உள்ள வேறுபாடுகள் பல உள. அவைகளை ஆராயப் புகுவோர்க்கு இவ்வடிகளின் பெருமை தெற்றென விளங் கும். அவைகளில் சிலவற்றை ஈண்டு நோக்குவோமாக.

துறவிகள் என்றால் இளமையிலேயே நல்ல ஞான நூல் களைக் கற்று அதனால் வாழ்க்கையிலுவர்ப்புற்று இக லோக இன்பங்களைத் துறந்து வீட்டுலக இன்பமடைய வேண்டி ஞானநெறியினிற்போரையே குறிக்கும். நம் பாம்பனடிகள் இந்நிலைக்குச் சிறிது மாறுபட்டவர். இள மையில் நல்ல ஞான நூல்களைக் கற்காதவர்; வாழ்க்கையிலு வர்ப்புக் கொள்ளாதவர்; மக்களொடு மகிழ்ந்து மனையறங் காத்தவர்; தம் பதின்மூன்றாவது வயதில் இறைவனையே வேண்டி "கங்கையைச் சடையிற் பரித்து" எனும் மங்கல மொழித் தொடர் அவனருளால் உண்டாக, அதனையே பற் றுக்கோடாகக் கொண்டு கவி பாடத் தொடங்கிய கவிவல்ல வர். இறைவன் திருவருள் தூண்டப் பெற்று, துறவுபூண்டு வீட்டை விட்டு வெளிப்போந்துள்ளவர். துறவானதற்கப் புறம் இல்லற வாழ்க்கையைப் பற்றிக் கனவிலும் கருதாத வர். மேலும் பிரப்பன்வலசையில் தவம் செய்து கொண்டி ருந்தபொழுது ஏழாம் நாளிரவில் ஓரிளைஞரோடு இரு முனி வர்கள் நம சுவாமிகளின் முன்னர்க் காட்சியளித்தனர். அந்த இளைஞர் வேறுபுறம் பார்க்கவே, அம்முனிவர்கள் "கல்வியறிவில் உம்முடைய திறம் இவருக்குமுண்டு. இவர் உம்மைப் பார்க்கவே வந்தார்" என்று கூறினார்களாம்,

அதிலிருந்து சுவாமிகளின் இயற்கை அறிவு மேம்பாடு தெற்றெனப் புலப்படும்.

இரண்டாவதாக மற்றைத் துறவியர் எல்லாரும் தங்கள் வாழ்வைப் புனிதமாக்க யோகம், தவம் முதலியன ஆற்றினரேயொழிய பொதுமக்கள் உய்ய யாதும் வகை செய்திலர். சிலர் ஞான நூல்களைப் பக்குவான்மாக்கள் படித்துப் பயன் பெறும் பொருட்டு எழுதி உதவியுள்ளனர். ஆனால் நம் பாம்பனடிகளோ தம் ஆன்மா நன்னிலையடைய முயற்சி மேற்கொண்டதோடு மாத்திரம் அமையாது பாமர மகனும் உய்தி பெற்றிலங்க அவனுக்கு எழும் ஐயங்களையெல்லாம் போக்கி இறையருள் நாட்டத்தை நிலைபெறுத்த மேற்கொண்ட முயற்சிகள் அளப்பில. அவை வருமாறு:—

எந்தத் துறவியும் முருகனுக்கு விழா எடுங்கள்; அது எடுக்க வேண்டிய முறை இத்தன்மைத்து என்றெல்லாம் கூறவுமாட்டார்கள். அதற்கென்று ஒரு சபை நிறுவி அச் சபையிலுள்ளோர் இன்னின்னவாறு ஒழுக வேண்டும் எனக் கட்டளையிடவுமாட்டார்கள். ஆனால் நம சுவாமிகள் மயில் வாகன சேவை என ஒரு விழாவைக் கொண்டாட ஆணையிட்டார்கள். மகாதேஜோ மண்டல சபை எனும் ஒரு நிறுவனத்தை நிறுவி அச்சபையினர் மேற்கொள்ளவேண்டியன யாவை என்பன பற்றியும் அறுதியிட்டுக் கூறியுள்ளார்கள். அவர்கள் கூறிய வழி நடக்கவில்லையெனில் அது அடிகளாருக்கு இழைத்த பெரும் குற்றமாகும். அவ்வாறு பல முறைகளையும் ஏற்படுத்தி மக்களைப் பத்திநெறியிலுய்த்த சுவாமிகள் கால நிலைக் கேற்ப மக்கள் மனத்திலெழும ஐயங்களைப் போக்குவான் வேண்டிப் பல வியாசங்களையும் எழுதி உதவியுள்ளார்கள். அவ்வியாசங்களைப் படித்துணரின் இறைவனே இல்லையென்று கூறும் உலகாயதனும் வாய்மூடி மௌனியாகி இறைவனுண்மையை ஒப்புக்கொள்வான் என்பது திண்ணம்.

அடிகளாரவர்கள் அவ்வக் காலத்து ஏற்பட்ட போலிச் சமயக் கொள்கை எனும் பாசிகளை நீக்கி உண்மைச் சமயக் கொள்கை இதுதான் என்று எடுத்துக் கூறும பாங்கு மிகவும் மெச்சத்தக்கது. எடுத்துக் காட்டாக அருணகிரிநாதர் வரலாறு, முருகன் திருவவதாரம், முதலியவைகளில் காணக் கூடும் பகுத்தறிவுக் கேலாதனவற்றை நீக்கி உண்மையை உலகினருக்கு எடுத்துக் கூறும் தெளிவு மிகவும் மெச்சத்தக்கனவாகும்.

துறவிகள் பொதுவாகத் தங்கள் வரலாறுகளைப் பிறரைக் கொண்டுகூட எழுதச் செய்யார். அநித்தியமான சரீரத்துக்கு என்ன வரலாறு வேண்டியிருக்கிறதென்றெல்லாம் வேதாந்தம் பேசுவர். ஆனால் நம் சுவாமிகளோ பிறரைக் கொண்டு எழுதச் செய்ததோடு அதனைத் தாம் நேரேயே சரியாக எழுப்பட்டுள்ளதா எனக் கூர்ந்து நோக்கியுள்ளார்கள். பிற்காலத்து மக்கள் புனைந்துரைகளை எல்லாம் அவ்வரலாற்றில் புகுத்திவிடுவர். அவரவர் வரலாற்றிலே இறைவன் அருளிப்பாடு எவ்வெவ்வாறு மகத்துவம் பெற்று விளங்குகிறது என்பதையெல்லாம் மக்கள் உணர்ந்து தங்கள் வாழ்க்கையைத் திருத்திக் கொள்ள வேண்டும் என்ற பேரருள் நோக்கால் இவ்வாறு தங்கள் சரித்திரமே உண்மை உருவில் வெளிவருவதில் அவ்வளவு அக்கறைகாட்டியுள்ளார்களெனில் அவர்களின் பரோபகார சிந்தைக்கு ஒரு எல்லையும் உண்டோ?

மேலும் இவர்கள் சைவ சமய மேம்பாடு குறித்து எழுதிய நூல்களைக் காணப்புகின் இவர்கள் பரந்த அறிவு தெறறெனப் புலப்படும். இளமையில் அவ்வளவு நன்றாய்ப் படிக்காமலிருந்தும இவ்வாறு பல நூலறிவு சுவாமிகளுக்கு ஏற்பட்ட விதம எப்படி என்பது பற்றி ஆராயப் புகின் அது புதிராகவே அமையும். சென்ற பிறவியில் முற்றக்கற்ற புண்ணிய விசேடத்தால் இவ்வாறு தோன்றி இம்மையில்

அக்கல்வி கைகொடுத்திருக்குமோ என்று எண்ணத்தான் வாய்ப்பிருக்கின்றது. 'சைவ சமய சரபம்' என்னும் நூலில் சுவாமிகள் சைவ சமய மேம்பாடு பற்றிக் கூறும் சிறப்புக்களைப் பற்றி இச்சுருங்கிய கட்டுரையில் விரிக்க நினைக்கில் இடம் போதாது.

அந்தக் காலம் சைவ வைணவ வேற்றுமை மிக்கிருந்த காலம். சமணர்கள் போன்று சிவபெருமானைப் பார்த்தலே ஒண்ணாது என வைணவர்கள் கண்மூடிச் செல்லுந் தன்மை யுமிருந்தது. அத்துடன் சைவ நிந்தனையும் அது பற்றியே பல நூல்களும் எழுந்தன. இந்நிலை நம் சுவாமிகளுக்கு மிகவும் சினத்தை யூட்டிற்று. வைணவம் எப்படித் தோன் றியது என்பது முதல் எல்லாவற்றையும் அடிமுதல் ஆய்ந்து விஷ்ணுவும் சிவன் கோயில் பரிவார தேவதையில் ஒருவர் எனவும் நிறுவி, தக்க மேற்கோள்கள் எண்ணற்ற நூல்களு ளுமிருந்து எடுத்துக் காட்டி வாதத்தில் வென்ற நிலை மிகவும் போற்றத்தக்கதாம். சிலர் வழக்கு மன்றத்திற்கும் ஏகினர். அங்கும் சுவாமிகள் கூறிய கொள்கையே வெற்றி பெற்றது. இது ஒரு துறவி மேற்கொள்ளக் கூடிய செயலா? "இரா மன் ஆண்டாலென்ன? இராவணன் ஆண்டாலென்ன?" என்றிருக்க வேண்டியவருக்கு இந்நிலையெல்லாம் ஏன்? எனச் சிலர் கருதக்கூடும். அவ்வாறு பாராமுகமாயிருந் திருந்தால்—வெற்றி ஒருபுறமிருக்க—அந்நூல்களிற் காணும் பல்வேறு மேற்கோள்களைப் படித்தறியும் வாய்ப்புக்கூட இக்காலத்துக் கிடைப்பது அரிதாய் விடும்.

சுவாமிகள் இயற்றிய பாடல் நூல்கள் யாவும் முருகன் பெருமை குறிப்பனவாகவும் உரை நடை நூல்கள் யாவும் சிவன் பெருமை குறிப்பனவாகவுமே அமைந்திருத்தல் உணர்வார்க்கு எளிதில் விளங்கும்.

இறைவன் அவ்வக் காலத்து மக்களுக்கு நன்மை செய்யும் பொருட்டுச் சில அடியார்களை இவ்வுலகிற்கனுப்பியருள்வன். இதுவே இயற்கை நியதி. இவ்வுண்மைக்கேற்ப சைவ சித்தாந்த சமயச் சிறப்புப் பற்றி எடுத்துக் கூறவே இவர்கள் இவ்வுலகத்துதித்தார்களோ என எண்ணும் தன்மை கூட தோன்றுகின்றது.

மேலும் பல தெய்வ வழிபாடுகள் அறவே கூடாது. ஒரு தெய்வத்தையே வழிபடு தெய்வமாகக் கோடல் நன்று. அத்தெய்வத்தையே எப்பொழுதும் பூசனை புரிய வேண்டும் என்றே அவர்கள் நூலில் யாண்டும் எழுதியும் சொற்பொழிவில் பேசியும் வந்திருக்கிறார்கள். அக்கொள்கைக்கேற்ப, தம் வழிபடு தெய்வமாக முருகப் பெருமானைக் கொண்டார்கள். பிறரையும் அப்பெருமானைப் போற்றும்படி அறிவூட்டியுள்ளார்கள். அதனுல் சுவாமிகளைக் கௌமார சமயத்தினர் எனச் சிலர் கருதுவர். சுவாமிகள இந்நிலையினை ஏற்றுக் கொள்வதில்லை. முருக வழிபாடு என்பதால் தனிப் பிரிவு ஏற்படுத்தி அது சைவ சித்தாந்தத்துக்குச் சிறிது அப்பாற்பட்டதென்று கருதற்க. சைவ சித்தாந்த நெறியே சாலச் சிறந்ததாம். அந்நெறியிலேயே முருக வழிபாட்டுக்கிடமுண்டு என்று கூறி அவ்வாறு வாழ்ந்தும் வந்தார்கள்.

அத்துவிதம் என்பதற்குப் பலர் பலவாறு பொருள் கூறி இடர்ப்படும்போது "சைவ சித்தாந்திகள் அதனைச் சுத்தாத்துவிதம் என்பர்" என்று கூறி 'சுத்தாத்துவித நிர்ணயம்' என ஒரு நூலையே எழுதி நம் சைவ சித்தாந்தச் சிறப்பியல்புகளை விளக்கிப் போந்தார்கள்.

சுவாமிகள் முருகப் பெருமானைக் குறித்துப் பாடியருளிய பாடல்கள் 6666 ஆகும். அப்பாடல்களில் மக்களின புறவாழ்க்கைக்கும் அக வாழ்க்கைக்கும் வேண்டிய எல்லாப் பொருள்களுமுள்ளன. இவற்றை இன்னோர் படிக்க வேண்

டும் இன்னர் படிக்கக்கூடாதென்றில்லை. எல்லாருக்கும் அங்குப் பொருள் கிடைக்கும். அவற்றைக் கொண்டு பலன் பெறலாம். அத்துடன் அயையாதி சுவாமிகள் உரை நடையிலும் பல நூல்களும் 32 வியாசங்களும் எழுதிப் பொதுமக்கள் முன்னேற்றம் பெற உபகாரம் செய்துள்ளார்கள். அவர்கள் அருநிலைக்கிங்கை இவ்வியாசங்களைப் படிப்பவர் தெற்றென உணர்வர். அவ்வியாசங்களுள சில மறையக் கூடிய நிலையிலுள்ளன. அவற்றை அவ்வாறு மறைய விடாது வெளிக்கொணரச் செயபவேண்டியது சைவ அன்பராவார்தம் கடமையாகும்.

சுவாமிகள் தம் காலத்து மடம், ஆலயம் முதலியன திறவ முயன்றால் எவ்வளவோ செய்திருக்கலாம். அச் செயல்கள் ஆடம்பரத் தன்மையினவாய் முடியும் என்று அவர்கள் கருதினர்கள். அதனல் தான் புதுமை நிலையமைய ஒரு சபையினை உருவாக்கிப் பிற்காலத்து அவர்கள் பத்தி நெறியைப் பரப்ப வழி வகுத்து வைத்தார்கள். சுவாமிகள்,

> "குணமென்னும் குன்றேறி நின்றர் வெகுளி
> கணமேயும் காத்த லரிது"

என்னும் குறள் மொழிக் கிலையச் சினம் கொண்டவர் எனினும் தம்மையடுத்தவர்க்கருளும் பரம கருணை மூர்த்தியாகவும் விளங்கினர். கொண்ட கொள்கையில் மிகவும் உறைப்புள்ளவர். மந்திரங்கள் முதலியவற்றை யெல்லாம் எல்லாருக்கும் எடுத்துரைக்க வேண்டும் என்ற பரந்த எண்ணம் கொண்டவர். ஒரு சாராருக்கு மாத்திரம் சிலவித்தைகள் உரிமையுடையன எனக் கருதிய கண்மூடிப் பழக்கத்தை மண் மூடச் செய்தவர். தாம் எழுதிய பல நூல்களில் மந்திரார்த்தங்களை அங்கங்கு மிகச் செம்மையாக விளக்கி யருளியுள்ளார்கள். மேலும குருமுகமாகவே தீட்சை பெற்றுக் கொண்டால் மக்கள் சிறப்புறுவர் என்பதையும் ஒப்புக் கொள்ளும் தன்மையினர்.

இன்னும் இவைபோன்றே சுவாமிகளின் பெருமை பற்றியெழுதிக் கொண்டே செல்லின் கட்டுரை நீளும் என்றஞ்சி இத்துடன் முடித்துக்கொள்வல். பாம்பனடிகளிடம் அன்பு பூண்ட நாம் அவர்கள் அறிவுரைகளை மனத்துட்கொண்டு அவற்றின் படி நடத்தலே தலையாய கடமை என்பதை மாத்திரம் மறந்து விடக் கூடாது என்பதனை 30-ஆம் ஆண்டுக் குருபூசை நிகழும் தற்போது மீண்டும் ஒருமுறை ஞாபகப்படுத்தி அமைகின்றேன்.

வாழ்க உலகெலாம்!

வலிய ஆட்கொள்ளும் வள்ளல்

-: (R. S. இராமலிங்கம்) :-

எல்லாம் வல்ல இறைவன் எங்கும் இருக்கிறான். நாம் எல்லோரும் வழிபட்டு உய்வதற்குச் சிறப்பாக ஆலயங்களில் எழுந்தருளி அம்மை அப்பராய்க் காட்சி அளிக்கிறான். இதுவுமன்றி அன்பர்கள் திருவுளமே கோயிலாகக் கொண்டும் விளங்குகின்றான்.

" உய்யவென் னுள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா...... "

என்று மணிவாசகர் பரவுகின்றார். 'மருவும் அடியார்கள் மனதில் விளையாடும் மரகத மயூரப் பெருமாள் காண்' என்று அருணகிரியாரும், 'ஆறு திருப்பதி கண்டு, ஆறெழுத்தும் அன்பினுடன் கூறுமவர் சிந்தை குடி கொண்டோனே!" என்று குமரகுருபரரும் வழிபடுகின்றார். மாசுபடாத வெண்ணிற ஆடையைப் போல் மெய்யன்பர் மனந் தூய்மையாய் விளங்குகிறது. அவர்கள் உள்ளத்தில் அழுக்காறு, சினம் முதலான தீய குணங்களுக்கு இடம் இருக்காது,

செம்மையான மனத்தை உடையவர்கள் சிவனடியார்கள்.
ஆதலால் அவர்கள் உள்ளத்தில் அமர்ந்து உல்லாசமாக விளை
யாடுகின்றான் ஆண்டவன்.

சேறும், குப்பையும் நிறைந்த இடத்தை யாரும் விரும்
புவதில்லை. நறுமணம் வீசும் நல்ல இடத்தை அனைவரும்
விரும்புவார்கள். அது போல அகத்தைச் சுத்தமாக வைத்
துள்ள அடியவரைத் தேடி ஆண்டவன் வருகிறான். சிவன
டியார் திருவுளமே அவருக்குச் சிறந்த திருக்கோயில். உயி
ரினுஞ் சிறந்த ஒழுக்க நெறி நின்று உண்மை அன்பு செலுத்
தும் அடியவரை விட்டு ஆண்டவன் பிரிவதில்லை. இரும்
பைக் காந்தம் இழுப்பது போல் இறைவன் அடியவர்களைத்
தம்பால் இழுத்துக் கொள்கிறான். திருவருளுக்குப் புறம்
பான செயல்கள் நடக்கும் போது தடுத்து ஆட்கொள்
கிறான். அதனால் அவனை 'வலிய ஆட்கொள்ளும் வள்ளல்'
என்று சேக்கிழார் வாயாரப் புகழ்கிறார்.

நம்பி ஆரூரருக்குத் திருமணம் நிச்சயமானது. அந்த
ணர் குலத்தில் அவர்தம் மரபுக்கேற்பச் சிறந்து விளங்கிய
சடங்கவி மறையோர்பால் பெரியோர்கள் பெண் பேசினார்
கள். மணப் பந்தல் அமைத்து அலங்கரித்து மற்றும் மண
வினைக் கமைந்த செய்கையை மாதினைப் பயந்தார் செய்து
முடிக்க, மணமகனுக்குப் பைம்பொன் காப்புக் கட்டினார்
கள். மறுதினம், காலையில் முகூர்த்த வேளையில் மங்கல
வாத்தியங்கள் முழங்கின.

"தேமரு தொடையன் மார்பன் திருமணக் கோலங் காண
காமுறு மனத்தான் போலக் கதிரவன் உதயஞ் செய்தான்"

ஆம்! ஆரூரர் திருமணத்தைக் காண ஆதவனும் கீழ்த்
திசையில் ஆவலுடன் தோன்றினான். அணிகொள் பட்டா
டையும், ஆபரணங்களும், மாலைகளும் அணிவித்து ஆரூ
ரரை அலங்கரித்தனர். வைதீகத் திருவுடன் விளங்கிய நங்

தரரை வனப்புமிக்க குதிரை மேல் ஏற்றி அமரச் செய்து மங்கல கீதம் முழங்க மறையவர் சூழ வீதி வழியே ஆரூரர் பவனி வந்தார். அழகின் சோதியாய் விளங்கும் ஆரூரரைக் காண ஆயிரங் கண்கள் வேண்டும் என்பார் சிலர். மன்மதன் போல் விளங்கும் மாப்பிள்ளையை மணக்க சடங்கவி புதல்வி என்ன தவஞ் செய்தனளோ? என்பார் சிலர். இவர்கள் திருமணம் நம் ஊரில் நடைபெற நாம் கண்டு மகிழும் பாக்கியம் பெற்ருேம் என்று மகிழ்வார் பலர். மங்கல கீதம் பாடுவார் பலர்; ஆடுவார் பலர். நிறைகுடம், தூபம், தீபம் ஏந்தி மறையவர், மடவார் எதிர் கொளப் பவனிவந்து யாவரும் திருமணப் பந்தலை அடைந்தனர். ஏறி வந்த யோகப் புரவியை விட்டிறங்கி ஆரூரர் மணப்பந்தலில் நுழைந்தார். மணவினையைத் தொடங்கினுர்கள் மறையோர்கள். அவ் வேளையில் அருட் பெருஞ்சோதி ஆண்டவன் ஒரு வயோதிக அந்தணர் வடிவங் கொண்டு அங்கே தோன்றினுர். 'என் மொழியைக் கேளுங்கள் யாவரும்' என்று மறையவர்களை நோக்கிக் கூறினுர். பெரியவரே! வருக! என்று யாவரும் வரவேற்றனர்.

'எனக்கும் ஆரூரருக்கும் ஒரு வழக்கு உண்டு' என்று வயோதிகர் கூறவும், 'வழக்கு இருந்தால் வழக்கு முடித்து அல்லது வதுவை செய்யேன் என்று ஆரூரர் மறுமொழி கூறினுர்.

நீறு திகழ் மேனியுடன் நெற்றிக் கண் மறைய நின்ற பெரியவர் 'மறையோரே! மணமகனுய் நிற்கும் ஆரூரன் எனக்கு அடிமை' என்ருர்.

தேவரையும் மாலயன் முதலான திருவின் மிக்கார் யாவரையும் அடிமையாகவுடைய பெருமான் ஆரூரரை மட்டும் 'அடியான்' என்று கூறவும், அங்கு நின்ருர், இருந்தவர் எல்லோரும் அவரை உற்று நோக்கி இது ஓர் அதிசயம்

எனக் கருதி 'இவர் என்ன நினைந்து இங்கு வந்துள்ளார்' என்று சினந்தனர்; வெகுண்டனர்; சிரித்தனர்.

'நீறு பூசிய பெரியவரே! நன்று உம் செயல்!' என்று ஆரூரும் கைகொட்டி நகையாடினர்.

'என்னடா நீ சிரித்தது; நீ அடிமை என்று உன் தந்தைக்குத் தந்தை எழுதிக் கொடுத்த ஓலை இதோ பார்!' என்று வயோதிகர் முகஞ் சினந்து மொழிந்தார்.

ஆரூரர் ஓர் அந்தணர் வேறோர் அந்தணருக்கு அடிமையாதல் உண்டோ? மாசிலா மரபில் வந்த என்னை அடிமை என்று பேச வந்த நீர் பித்தனோ? என்றார். ஆய்! பித்தனுமாக. பேயனுமாக; இன்னும் எத்தனை தீங்கு சொன்னாலும் சரி; என்னை நீ அறியவில்லை; அடிமையாகிய நீ எனக்குப் பணி செய்தே ஆக வேண்டும், என்று மறு முறையும் அவ்வந்தணர் கூறி நின்றார். இவ்விதம் மணவினையைத் தடுத்துத் தம்மை அடிமை என்று சாதித்து நிற்கும் வயோதிகரை ஆரூரர் உற்று நோக்கவே, அவர் வடிவத்தைக் காணும் போது அவருள்ளத்தில் ஆர்வம் பொங்கியது; ஆனால் கூறும் மொழிகள் உள்ளத்தில் கோபத்தை உண்டாக்கியது.

" கண்டதோர் வடிவால் உள்ளங் காதல் செய்து உருகா நிற்கும்
கொண்டதோர் பித்த வார்த்தை கோபமும் உடனே யாக்கும் "

எனவே, மனந் துணிந்து 'எங்கே ஓலையைக் காட்டும்' என்று அந்தணர் அருகில் ஆரூரர் நெருங்கினர். 'ஓலையைப் பார்க்க வல்லவனோ நீ' என்று மெல்ல அந்தணர் நகர்ந்தார். ஆரூரர் வெகுண்டு அவரைப் பின்தொடர்ந்து ஓலையைக் கையிலிருந்து கைபபற்றினர். அந்தணர் அந்தணருக்கு அடிமையாதல் என்ன முறை! என்று கூறி ஓலையைப் பற்றி இழுத்து ஆரூரர் கிழித்து எறிந்து விட்டார்! சிரித்துத் திரிபுரம்

எரித்த சிவபெருமானுக்கு அப்பொழுது கோபம் வரவில்லை. ஏன்? ஆட் கொள்ள வந்த கருணையால். முன்பு வேதனும், மாலும் இறைவன் அடியையும் முடியையும் காண முடியாமல் அலைந்தார்கள்.

" எந்தை நினது அருள் விளையாட்டு
எள்ளளவும் அறிந்திலோம் "

என்று மறைகளெல்லாம் முறையிடுகின்றன. இவ்விதம் யாவருங் காணுதற்கரிய இறைவனை ஆரூரர் அல்லாது வேறு யார் எட்ட வல்லார்? என்று சேக்கிழார் அழகாகக் கூறுகிறார்.

" ஆவணம் பறிக்கச் சென்ற அளவினில் அந்தணாளன்
காவணத் திடையே யோடக் கடிதுபின் தொடர்ந்துநம்பி
பூவணத் தவரை யுற்றார் அவரலாற் புரங்கள்செற்ற
வேவணச் சிலையி னாரை யார்தொடர்ந்து எட்டவல்லார் "

அவ்விதம் ஓலையைக் கிழித்து எறியவும், ஈறு முதலும் இல்லாத இறைவன் 'இது முறையோ? என்று ஆரூரர் கையைத் தம் கரங்களால் பிடித்துக் கொண்டார். அருகில் நின்றவர்கள் இருவரையும் விலக்கி' உலகில் இல்லா முறையைக் கூறும் திருமறை முனிவரே! நீர் எங்குளீர் செப்பும் என்று கேட்டனர். 'யான் இங்கு வெண்ணெய் நல்லூரில் இருப்பவன்; வன்முறை செய்து ஓலையை வலிய வாங்கிக் கிழித்து நின்றான் இவ்வடிமை' என்று வாதாடினார்.

நீவிர் வழக்குப் பேசுவதில் வல்லுநராய் விளங்குகின்றீர்; பழைய மன்றாடி போல் பேசுகிறீர். வெண்ணெய் நல்லூரைச் சேர்ந்தவராயின் வேதியரே அங்கே சென்று வழக்கைப் பேசலாம், என்று ஆரூரர் அழைக்கலுற்றார். வெண்ணெய் நல்லூர்க்குச் சென்றாலும் என் வழக்கில் வெற்றி காண்பேன். என்னிடமுள்ள மூல வோலையைச்

சபையோரிடம் காட்டி நீ அடிமையாதலைச் சாதிப்பேன்; வா என்று கையில் தண்டுடன் கிழவர் முன் செல்ல சுந்தரர் பின் சென்றார். வேதியர் வாழும் வெண்ணெய் நல்லூர் வந்து யாவரும் சேர்ந்தனர்.

தற்காலம் நீதி மன்றம் இருப்பது போல் அக்காலத்தில் வழக்கு விசாரிக்க அறிஞர்கள் அடங்கிய சபை இருந்தது. சபையோர் முன் வந்து வேதியர் தம் வழக்கைச் சமர்ப்பித்தார்.

'மூதறிவீர்! இவன் திருநாவலூர் ஆரூரன். இவனது தந்தைக்குத் தந்தை எழுதிக் கொடுத்த ஆவணத்தின்படி இவன் எனக்கு அடிமை. என்னிடமுள்ள ஓலையை வாங்கி இவன் கிழித்து எறிந்து விட்டான். இது என் வழக்கு' என்றார்.

'மறையவர் மற்றவருக்கு அடிமை ஆதல் இம் மாநிலத்தில் இல்லை. ஆயினும் அடிமைச் சீட்டைக் கிழித்தல் முறை ஆகாது' என்று சபையோர் மொழிந்தனர். அவ்வமயம் ஆரூரர் அவர்களை நோக்கி 'அனைத்து நூலுணர்ந்தீர்! அடியேன் ஆதி சைவன் என்றறிவீர். என்னைத் தனக்கு அடிமை என்று கூறும் மாயம் என்னவோ? அறியேன்' என்று மனம் வருந்திப் புலம்பினார். உடனே சபையோர்கள் வம்பு பேசி வழக்காடி நிற்கும் வேதியரை நோக்கி 'இது போலும் சம்பவம் எப்பொழுது நடந்தது? இதற்கு ஆதாரம் உண்டா? அல்லது சாட்சி உண்டா? இம்மூன்றில் ஒன்றை நிரூபித்துக் காட்ட வேண்டும்' என்று கேட்டுக் கொண்டனர்.

'ஆரூரன் அடிமை என்பதற்கு ஆதாரம் உண்டு. இவன் கிழித்தது படி ஓலை. சபையோரிடம் சமர்ப்பிக்க மூல ஓலை என்னிடம் வைத்திருக்கிறேன். படித்துப் பார்க்கலாம்; இதோ படியுங்கள்.

"அருமறை நாவ லாதி சைவன் ஆரூரன் செய்கை
பெருமுனி வெண்ணெய் நல்லூர்ப் பித்தனுக்கு யானும்
என்பால்
வருமுறை மரபு ளோரும் வழித்தொண்டு செய்தற்குஓலை
இருமையால் எழுதி நேர்ந்தேன் இதற்குஇவை
என்னெழுத்து"

இவ்விதம் தம் கையால் எழுதிக் கையொப்பமிட்டுக் கொடுத்திருக்கிறார். கவனியுங்கள். இன்னமும் சந்தேகம் உண்டாயின் இவரது பாட்டனார் எழுதிய ஓலை இல்லத்தில் இருந்தால் அதனைக் கொண்டு வந்து இவ்வோலை எழுத்தோடு ஒப்பிட்டுத் தீர்ப்புக் கூறலாம் என்று விரிவாகப் பேசினார் வலிய ஆட்கொள்ள வந்த வயோதிக வள்ளல்.

அவ்விதமே சபையோர்கள் ஆரூரர் இல்லத்திலிருந்து அவரது தந்தைக்குத் தந்தை எழுதிய இன்னொரு ஓலையைக் கொண்டு வரச் செய்து இரண்டையும் ஒப்பு நோக்கினார்கள். இரண்டும் ஒன்றாக இருக்கக் கண்டார்கள். உடனே தீர்ப்புக் கூறுகிறார்கள்.

'இனிச் செயல் இல்லை; நான்மறை முனிவனார்க்கு நம்பியாரூரர் தோற்றீர்! அவருக்குப் பணி புரிதல் கடன்' என்று பண்பு மிக்க பெரியோர்கள் விளம்பினார்கள்.

நம்பியாரூரர் மனம் வருந்தி 'விதிமுறை இதுவே யாகில் யானிதற்கு இசைந்தே தீர வேண்டும்' என்று நின்றார். அந்தணர் அந்தணருக்கு அடிமையாதல் வழக்கமில்லை என்றாலும் வேதியர் தம் வழக்கில் வெற்றி கண்டார். தீர்ப்புக் கூறிய சபையோருக்கு ஒரு சந்தேகம் எழுந்தது. வெண்ணெய் நல்லூர் என்று சொல்லி வாதாடிய வேதியர் வசிக்கும் இல்லம் எது என்று கேட்க வேண்டும் என்று விரும்பினார்கள். வழக்கில் வென்ற வேதியரை நோக்கி 'இவ்வூரில் நீவிர் இருந்து வரும் இல்லத்தைக் காட்டுவீர்' என்று கேட்க,

'என்னை ஒருவரும் அறியீராகில்' என் பின்னே வாருங்கள்' என்று அவர் முன் செல்ல, மறையோர் குழாமும் நம்பியும் பின் செல்ல வேதியர் திடீரென மறைந்து விட, அனைவரும் திகைத்து நின்றார்கள். வானத்தில் விடைமேல் தோன்றி இறைவன் காட்சி அளித்தார்.

'முன்பு நீ நமக்குத் தொண்டன்; நம் ஏவலாலே மண்ணில் பிறந்தனை; துன்புறு வாழ்க்கை தொடரா வண்ணம் மறையோர் முன்னே நாம் தடுத்து ஆண்டோம்' என்றார். அவ்வோசையை அனைவருங் கேட்டனர். ஆரூரர் மனங் களித்து ஆனந்தக் கண்ணீர் சொரிந்து தொழுத கை தலைமேலாக 'மன்றுளீர் செயலோ? வந்து வலிய ஆட்கொண்டது' என்று நிலத்தில் விழுந்து பணிந்து எழுந்தார்.

" மற்றுநீ வன்மைபேசி வன்றொண்ட னென்னுநாமம்
பெற்றனை நமக்கு மஃபிற் பெருகிய சிறப்பின்மிக்க
வற்சனை பாட்டே யாகும் ஆதலான் மண்மேல் நம்மைச்
சொற்றமிழ் பாடு கென்றார் தூமறை பாடும் வாயார்"

இவ்வரிய உரையை நம்பியாரூரர் கேட்டு 'பாடும் பணியே பணியாய்' அருளும் பரமனை நோக்கி, 'வேதியனாகி யென்னை வழக்கினால் வென்ற கோதிலா அமுதே!' நாயேன் என் சொல்லிப் பாடுகேன்' என்று மொழியவும், 'முன்பு பித்தனென்று சொன்னபடி என் பெயர் பித்தனென்றே வைத்துப் பாடுவாய்' என்று அருளிச் செய்தார். இவ்விதம் வலிய வந்து ஆட்கொண்ட வள்ளல் பெருமையைச் சேக்கிழார் பெரிய புராணத்தில் சிறப்பித்துக் கூறியுள்ளார். அனைவரும் படித்து இன்புற்று இறைவனடி பேணி உய்வார்களாக.

——:0:——

மதிப்புரை

சுருதி சூக்தி மாலை—மூன்று பாகங்கள் கொண்டது; தற்போது இரண்டு பாகங்கள் மாத்திரம் வரப்பெற்ரும். மூன்ரும் பாகம் விரைவில் வெளிவர இருக்கின்றது. மூன்று பாகங்களும் சேர்ந்து விலை ரூ. 6-00. பதிப்பாசிரியரும் வெளியிடுபவரும் திருவையாறு அண்ணுஸ்வாமி சிரௌதிகள், பணியாளர், ஸ்ரீ ஹரதத்தர் பக்த ஜன சபை, C/o டாக்டர் ராகவன், 8. யோகாம்பாள் தெரு, தியாகராய நகர், சென்னை-17.

இவற்றுள் முதற்பாகத்தில் ஸ்ரீ ஹரதத்தர் சரித்திரம், அப்பெருமானைப்பற்றிப் பெருமக்கள் பாடிய வணக்கப் பாமாலைகள், சுருதி சூக்தி மாலை (நாகர எழுத்தில்) முதலியன காணப்பெறுகின்றன. கஞ்சனூர் என்னும் பாடல் பெற்ற தலத்தில் வைணவக் குடியில் தோன்றிய பெருமான் ஹரதத்தர் அங்குக் கோயில் கொண்டெழுந்தருளியுள்ள இறைவனருள் பெற்றுப் பழுக்கக் காய்ச்சிய இரும்பு முக்காலியிலமர்ந்து சிவனே பரம்பொருள் என யாவரும் ஒப்புக்கொள்ளுமாறு உறுதியாய் உரைத்தார் என்று வரலாறு கூறுகின்றது. அவ்வமயம் அப்பெருமான் பாடிய நூல் சுருதி சூக்தி மாலையாகும்.

இந்நூற்குப் பண்டிதராஜ ப்ரும்மஸ்ரீ கை, பாலசுப்ரமணிய சாஸ்திரிகள் பதவுரை, விளக்கவுரை முதலியன எழுதி உதவியுள்ளனர். இப்பகுதி இரண்டாம் பாகத்தில் அடங்கியுள்ளது. வடமொழியில் அமைந்த இந்நூலைத் தமிழ் அறிந்த சைவப் பெருமக்களும் நன்கு தெரிந்துய்ய வேண்டும் என அன்பு மேற்கொண்டு வடமொழி சுலோகங்களைத் தமிழிலேயே வெளியிட்டு விளக்கவுரை முதலியனவும் சிறப்புற எழுதச் செய்து உதவியுள்ளார்கள்.

வேதாந்த நெறியே விழுமிது எனப் பறைசாற்றும் பலர் நடுவில் நம் சிரௌதிகள் சைவ சித்தாந்த நெறியைப் பரப்பத் தம் தளர்ந்த வயதிலும் எடுத்துக் கொண்டிருக்கும் ஊக்கம் மிகவும் பாராட்டத்தக்கது. இந்நூல் சைவ

சித்தாந்த நெறிக்கு அமைந்த வடமொழி நூல் ஆகும். இதனைப் போன்ற பல வடமொழி நூல்களையும் படித்துத் தெரிந்துகொண்டால் நம் சைவ சித்தாந்தக் கொள்கையின் சிறப்பு தெற்றென விளங்கும். யாவரும் இதனை வாங்கிப் படித்துப் பயன்பெறுவார்களாக. (அம்பை)

(4) "சேக்கிழார் பிள்ளைத் தமிழ் பாட்டும்—உரையும்"— என்னும் நூல் ஒன்று வரப்பெற்றோம். மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களால் எழுதப்பெற்ற சேக்கிழார் பிள்ளைத் தமிழ் இதுகாறும் 7 வெவ்வேறு பதிப்புக்களாக வெளிவந்துள்ளது. இது எட்டாவது பதிப்பாகும் எனத் தெரிகின்றது. இதன் உரை ஆசிரியர் கரந்தைப் புலவர் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் வித்துவான் திரு. அடிகளாசிரியர் ஆவார். இவ்வுரை நூலில் கருத்துரை, விளக்கவுரை, முடிபு முதலிய பகுதிகளை ஆசிரியர் தம் நீண்ட காலப் பட்டறிவுக்கேற்ப மிகவும் சிறப்பாய் எழுதியுள்ளார். இதனைப் படித்தோர் சேக்கிழார் பிள்ளைத் தமிழின் நயமுணர்ந்து இன்பந்திளைப்பது ஒருதலை. வித்துவான் தேர்விற்குப் படிக்கும் மாணவர் உளங்கொளற் பொருட்டுத் தமிழ் அறிவு செழித்தோங்கும் முறையிலும் ஆங்காங்கு இலககண விளக்கம், நயப்பகுதி முதலியவற்றையும் விளக்கிக் காட்டும் திறம் போற்றத்தக்கதாயுள்ளது. யாவரும் வாங்கிப் படித்துப் பயன் பெறுவார்களாக. நல்ல அச்சு; 300 பக்கங்கள (கிரௌன் அளவு) கொண்ட இந்நூலின் விலை ரூ, 4-00. நூல் கிடைக்குமிடம் "வித்துவான் திரு. அடிகளாசிரியர், தமிழ்ப்பேராசிரியர், கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சாவூர்-2" என்பதாம். (அம்பை)

"ஞானியார் ஸ்விடன்பர்க் சுவாமியார் அவர்களின் பொன்மொழிகள்" என்னும் நூல் ஒன்று வரப் பெற்றோம். இஃது ஆஸ்திரேலியா கான்பரா நகரிலுள்ள திரு பேசில் லேஜர் அவர்களால் ஆங்கிலத்தில் தொகுக்கப் பெற்ற "பொன் மொழிகள்" என்னும் நூலின் தமிழ் மொழி பெயர்ப்பாகும். மொழி பெயர்த்தவர் வேலூர் G. இராஜ

மாணிக்கம் செட்டியார் பி.ஏ., அவர்கள் ஆவர். இந்நூலில் பல மதங்களுக்கும் சம்மதமான ஏறக்குறைய எழுபது பொன்மொழிகள் இலங்குகின்றன. இவை யாவும் எம்மதத்தையும் தாக்காத சம நோக்குடையன. தங்கள் சமயத்தவர் தவிரப் பிற மதத்தவர் யாவரும் அஞ்ஞானிகள் என்றும் தங்கள் சமயத்தில் சேர்ந்தால் தான் மோக்ஷம் சித்திக்கும் என்றும் வாய்ப்பறையறையும் சிலர் போலாது இப் பெரியார் யாவரையும் நற்பாதைக்கு அழைத்துச் செல்ல இப் பொன்மொழிகளைத் தொகுத்திருப்பது வரவேற்கத்தக்கது. விலை ரூ. 0–37; 48 பக்கங்கள் கொண்டது. வேண்டுவோர் :–
G. இராஜமாணிக்கம் செட்டி, ஸ்வீடன்பர்க் புத்தகசாலை, மிலிடேரி பார்க், காட்டுப்பாடி P. O. (தென்னிந்தியா) என்ற முகவரிக்கு எழுதிப் பெற்றுக் கொள்க. (அம்பை)

“Death and After” என்னும் ஆங்கில நூல் ஒன்று வரப்பெற்றோம். திரு ஸ்வீடன் பர்க் பொன்மொழிகளில் “இறப்பும் அதன் பின்னரும்” என்னும் தலைப்புப் பற்றிய அவர் கருத்துக்கள் பலவற்றை P. W. Kenyon என்பவர் தொகுத்து வெளியிட்டுள்ளார். 40 பக்கங்கள் கொண்ட இந்நூல் இலண்டன் ஸ்வீடன் பர்க் சொஸைட்டியின் சார்பாக அச்சிடப் பட்டுள்ளது. மிகவும் கவர்ச்சிகரமான அச்சு; நல்ல அட்டை. இந்நூலில் எம் மதத்தவரும் ஒத்துக் கொள்ளத் தக்க பொதுக் கருத்துக்களே உள்ளன. நம் உண்மைச் சைவ சித்தாந்தம் வலியுறுத்துவன யாவும் இக்கருத்துக்களிலுள்ளன. ஆதலின் ஸ்வீடன் பர்க் ஞானியார் சைவ சித்தாந்தக் கருத்தை மேல் நாட்டில் பரப்பிய பெருமை பெற்றவராகிறார். அது பற்றி முன் சித்தாந்த இதழில் பார்க்கலாம். விலை குறிக்கப் பெறவில்லை. வேண்டுவோர் ‘ஸ்வீடன் பர்க் புத்தகசாலை, மிலிடேரி பார்க், காட்டுப்பாடி P.O., (தென்னிந்தியா)’ என்ற முகவரிக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம். (அம்பை)

வருந்துகிறோம்

சைவ சித்தாந்தச் செந்நெறியே விழுமிது என எழுதியும் சொற் பெருக்காற்றியும் அறுபான் மும்மை யடியார்களின் வரலாற்றுப் பெருமையை உலகறியச் செய்யப் பெரு விருப்பங் கொண்டு ஒல்லும் வகையான் தனித் தனி நூல்களாக அவைகளை வெளியிட்டும் உதவிய அந்தணப் பெரியார் திரு. அண்ணுசாமி சிரௌதிகள் அவர்கள் புது தில்லியில் காலமானது தெரிந்து வருந்துவதுடன் அவர் பிரிவால் வருந்தும் குடும்பத்தினருக்கும் சமாஜம் வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறது.

காலம் சென்ற அப்பெரியாரின் ஆன்மா இறைவனின் னருளில் தோய்ந்து இன்புற்றிருக்க அவனருள் துணையை நாடி இறைஞ்சுகின்றோம்.

நம் சமாஜ ஆயுள் உறுப்பினரும் சமாஜச் செயற்குழுவில் முன்னாள் உறுப்பினருமாயுள்ள திரு. K. C. நாகலிங்க முதலியார் அவர்கள் காலமானது தெரிந்து சமாஜம் வருந்துகின்றது.

திரு. முதலியார் அவர்கள் சிவம் பெருக்கும் சீலர் ஆவர். திருவாமூர் அப்பர் திருவிழாக் கோலம் கண்டு மகிழ்ந்து சென்னையுற்றார். எதிர்பாராதவிதமாய்த் திடீரென்று அவர் மறைந்தது சைவ உலகுக்குப் பேரிழப்பாகும். அவர் குடும்பத்தினருக்கு சமாஜம் ஆழ்ந்த துயரினைத் தெரிவித்துக் கொள்கிறது.

காலஞ்சென்ற அப்பெரியாரின் ஆன்மா இறைவனின் னடியில் இன்புற்றிருக்க எல்லாம் வல்ல பெம்மான் அருள் பாலிக்க அவன் பொன்னார் கழலிணைகளையே ஏத்தி இறைஞ்சுகின்றோம்.